[26th August 1961

Sri R. SRINIVASA IYER : ஸார், பாலம் கட்டுவதற்கு நாட்கள் ஆனாலும்கூட, வடக்கே போனால் அங்கே இருக்கக்கூடிய யமுனே, கங்கை போன்ற நதிகளின் டிரிபியூடரிகளுக்கு குறுக்கே கிராவல் போட்டு, அதற்கு மேல் தார் ரோடு போடப்பட்டிருக்கிறது. வெள்ளம் வந்தாலும் அந்த ரோடுகளின் மேல் வழிந்து போகக்கூடிய அளவிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆற்றில் ஒரு வருஷத்திலே இப்படி வெள்ளம் 10 நாட்களுக்குத்தான் போகும். ஆகவே அந்த மாதிரி ரோடு போடவாவது இப்போது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்படாததால் மதராஸ் கவர்ன்மெண்ட் செலவிலே செய்வதற்கு முன்வருமா ? பின்னல் வேண்டுமானல் 7, 8 லட்சம் செலவிலே திட்டம் போட்டு மத்திய அரசாங்கம் செய்யட்டும். ஆகவே உடனடியாக இந்த ஏற்பாட்டைச் செய்ய இந்த அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri P. KAKKAN : "செய்வன திருந்தச் செய்" என்று சொல்வதுபோல், ஒரு காரியத்தைச் செய்வது என்ருல், அதற்கு நல்ல முறையிலே திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும். இந்த விஷயங்களிலே நாம் என்ஜினியர்கள் சொல்லக்கூடியவைகளேயும் சிறிது கவனிக்க வேண்டும். ஆகவே அந்த முறையில் கவனிக்கப்பட்டு, இதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

Houses for Government Servants

***1378 *Q*.—Sri S. M. ANNAMALAI (on behalf of Sri V. SUBBIAH):** கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் மவுண்ட்ரோடு கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் சர்க்கார் சிப்பந்திகளுக்காக கட்டப்பட்ட வீடுகள் எத்தனே ?

(இ) அவைகளில் எத்தனே சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

(உ) சர்க்கார் சிப்பந்திகள் அல்லாதவருக்கு வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா ?

(எ) அப்படியானல், காரணமென்ன ?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Nil, Sir.

(*b*) to (*d*) Do not arise in view of the answer to Clause (*a*).

Sri K. VINAYAKAM : 1960-ல் கவர்ன்மெண்டு சர்வெண்டுகளுக்கு வீடு கட்டவில்லே என்று சொல்லப்படுகிறது. ஏற்கெனவே அங்கு கட்டப்பட்டுள்ள வீடுகள் கவர்ன்மெண்டு சர்வெண்டுகளுக்குத்தான் தரப்படுகிறதா ? அல்லது மற்றவர்களுக்கும் தரப்படுகிறதா ? அப்படி இருந்தால், அவர்கள் எண்ணிக்கை என்ன ?

The Hon. Sri P. KAKKAN : அவர்கள் எண்ணிக்கை இப்போது என்னிடத்தில் இல்லே. இந்த கவர்ன்மெண்டு எஸ்டேட்டிலே உள்ள வீடுகளே எல்லாம், 1, 2, 3, 4, 5, 6, 7, 8 என்று எட்டு வகைகளாகப் பிரித்திருக்கிருர்கள். சம்பளத்தைப் பார்த்து வீடுகள் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. எம்.எல்.ஏ-க்கள் தங்கியிருக்கிருர்கள். கெஜடெட் ஆபீசர்கள் குடியிருக்கிருர்கள். அதோடு கவர்ன்மெண்டு சர்வெண்டுகளுக்கும் ஒதுக்கப்படுகிறது. இந்த வீடுகள் ஒதுக்கப்படுவதற்கு வெயிட்டிங் லிஸ்டிலே உள்ளபடி கொடுக்கப்படுகிறது. அதேபோல் சில ஏழை டிசர்விங் கேஸ்களுக்கும் வீடுகள் ஒதுக்கப்படுகிறது. ஆனல் இப்போது சட்டசபை அங்கத்தினர்களுக்கு மட்டும்தான் வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Sri K. VINAYAKAM : சட்டசபை அங்கத்தினர்களுக்கு கட்டப்படுகிற வீடுகளேத் தவிர, இந்த கவர்ன்மெண்டு எஸ்டேட்டிலே நிறைய இடம் காலி இருக்கிற காரணத்தாலே, 4-வது வகுப்பைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்காயினும் வீடுகள் கட்டி வசதி செய்துதர இந்த ஆண்டிலாவது அல்லது இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலாவது ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

26th August 1961]

The Hon. Sri P. KAKKAN : எனக்குத் தெரிந்த மட்டிலும், அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு புதிதாக வீடுகள் கட்டுவதற்காக இந்த திட்டமில்லே. இப்போது அங்கு காலியாக உள்ள இடங்கள் பின்னுல் தேவைப்படும். ஆகவே இப்போது சட்டசபை அங்கத்தினர்கள் மட்டும் அவரவர்கள் குடும்பத்தோடு தங்குவதற்கு, அவர்கள் ஹௌஸ் கமிட்டியிலே உதவி சபாநாயகர் தலைமையில் முடிவு செய்தபடி ஏற்பாடு செய்ய இருக்கிறோம். அது விஷயம் பரிசீலனை செய்யப்பட்டு, அவர்களுக்கு மட்டும் இடம் கொடுக்க முடிவு செய்யப்பட்டு இருக்கிறது.

Misappropriation of money

*1402 *Q*.—**Sri V. K. KOTHANDARAMAN :** கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலுகா, கீழ்பட்டி கிராமம் மணியக்காரர் பணம் கையாடல் விஷயமாக 1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் தேதி கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்கு வி. கே. கோதண்டராமன், எம்.எல்.ஏ. அவர்கள் எழுதிய லெட்டர் சேர்ந்ததா ?

(இ) இது விஷயமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (அ) Yes, Sir.

(இ) The District Revenue Officer, North Arcot, has reported that the ex-headman of Kalpatti village, Gudiyattam taluk, North Arcot District, was ordered to be removed from service by the Sub-Collector, Tiruppattur, after a thorough examination of the case and that the action of the Sub-Collector, Tiruppattur is just and proper. He has also reported that the present acting headman of the village is not related to the ex-headman.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், சிறு சேமிப்பு நிதிக்காக வசூல் செய்த பணத்திலிருந்து 2,000 ரூபாய் கையாடல் செய்த குற்றத்திற்காக வேண்டி தண்டனை விதிக்கப்பட்டு, ஜெயிலில் இருந்து வந்த அந்த நபரை "டிஸ்மிஸ்ட் பிரம் சர்வீஸ்" என்று உத்தரவு போடுவதற்குப் பதிலாக "ரிமூவல் பிரம் சர்வீஸ்" என்று போட்டு, அந்தக் காரணத்தினுலே அவருடைய உடன்பிறந்த தம்பியை மீண்டும் அந்தப் பதவியிலே வைத்துக்கொண்டு, அங்கே இருக்கக்கூடிய கிராமத்திலே உள்ளவர்களுக்கு தொல்லே கொடுத்துக்கொண்டு இருப்பதற்குக் காரணம், இன்றைக்கு இருக்கக்கூடிய வெள்ளைக்காரன் செய்த ரெவின்யூ போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர்தான் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே இதைத் திருத்தி, "ரிமூவல் பிரம் சர்வீஸ்" என்பதற்குப் பதில் "டிஸ்மிஸ்ட் பிரம் சர்வீஸ்" என்று உத்திரவு போடுவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : நான் முன்னரே சொன்னேன். இப்போது வேலே செய்யக் கூடியவர் அவருடைய சொந்தக்காரர் அல்லவென்று. இரண்டாவது, ஒரு ஆளே வேலேயிலிருந்து டிஸ்மிஸ் செய்வதா, ரிமூவல் செய்வதா என்பது டெக்னிகல் பாயிண்ட். இதையெல்லாம் அந்தந்த ஆபீசர்கள் தங்கள் டிஸ்கிரிஷனில் செய்வார்கள். ஆகவே அந்த அளவிலே இதைச் செய்திருக்கலாம். இன்னென்று, அவர் பூராப் பணத்தையும் கட்டி விட்டார் அதனுல் இப்படிச் செய்திருக்கலாம். வேறு ஒன்றுமில்லே.

Sri V. K. KOTHANDARAMAN : கனம் அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கக்கூடிய பதில் ஒன்றிரண்டு மாதங்களுக்கு முன்னுல் வந்திருக்கலாம். அந்த நேரத்தில் கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுவது போல அவருக்கு உறவினர் அல்லாதவர் இருந்திருக்கலாம். ஆனுல்